ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்
BAR ASSOCIATION OF SRI LANKA

10 ஜுலை 2021

**கொவிட்-19 நடவடிக்கைகளை தடுக்கும் மற்றும் ஒற்றுமையின்மை, வெறுப்பு போன்றவற்றை தோற்றுவிக்கும் போலி செய்திகள், புகைப்படங்கள், காணொளிகளின் பகிரல் தொடர்பில் பொலிஸின் ஊடக அறிக்கை குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவின் அறிக்கை**

சமீபத்திய ''கொவிட்-19 நடவடிக்கைகளை தடுக்கும் மற்றும் ஒற்றுமையின்மை, வெறுப்பு போன்றவற்றை தோற்றுவிக்கும் போலி செய்திகள், புகைப்படங்கள், காணொளிகளின் பகிரல்'' என தலைப்பிடப்பட்டு அண்மையில் இலங்கை பொலிஸினால் வெளியிடப்பட்ட அண்மைய ஊடக அறிக்கையின் உள்ளடக்கங்கள் குறித்த கரிசனங்களை இசச வெளியிடுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபமாணது இலங்கை பொலிஸின் குற்ற விசாரணை பிரிவு மற்றும் கணனி குற்றப் பிரிவு என்பன விதிகளை மீறுவோரிற்கு எதிராக சட்டத்தை அமுலாக்கும் பொருட்டு இணையத்தை கண்காணிப்பதன் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளும் எனும் எச்சரிக்கையை உள்ளடக்கியுள்ளது.

அவதூறு மற்றும் வன்முறை தூண்டல்களுடன் தொடர்பானவற்றில் சட்டங்களை அமுலாக்குவது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு எவ்வித ஆட்சேபங்களும் இல்லாதபோதிலும் அபிப்பிராயபேதங்கள் மற்றும் விமர்சனங்களது கண்ணியமான வெளிப்பாடுகளின் குரல்வளையை நெறிப்பதற்கு அத்தகைய சட்டங்களை அதிகாரிகள் பயன்படுத்தாதிருப்பதனை உறுதிப்படுத்துவதும் முக்கியமானதாகும்.

மேலும் இசசமானது எது உண்மையான அல்லது போலியான செய்தி என்பதனை தீர்மானிப்பதற்கும் அவர்களது உள்ளார்ந்த தீர்மானங்களின்படி ஆட்களது கைது மற்றும் தடுத்துவைத்தல்களை மேற்கொள்வதற்கும் பொலிஸ் உள்ளிட்ட நிறைவேற்று குழுவின் உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவதனை விசனமுள்ளதாக காண்கிறது.

இசசமானது அரசியலமைப்பில் பொறிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளான பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தின் குரல்வளையை நெறிப்பதற்காக சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களை சில பொலிஸ் அதிகாரிகள் து~பிரயோகப்படுத்தலாம் என்பதில் ஆழமான கரிசனத்தை கொண்டுள்ளது. கொவிட்-19 தொற்றுப்பரவலின் விளைவாக நாடானது பயணக்கட்டுப்பாட்டின் கீழிருக்கும் நிலையில் மக்களது பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டிற்கான சுதந்திரங்களும் அபிப்பிராயபேதங்கொள்வதற்கும் மறுப்பதற்குமான அவர்களது உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டியது அவசியமானதாகும்.

இதன்பொருட்டு இசசமானது உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் குறித்து கவனத்தை ஈர்க்க விரும்புகின்றது :-

உச்ச நீதிமன்ற நிதி உரிமைகள் வழக்கு எண் 556/2008 மற்றும் 557/2008 இலக்க யூ.என்.எஸ்.பி குருகுலசூரிய, கோருநர், சுதந்திர ஊடக இயக்கம், மற்றும் ஜே.கே. டபிள்யூ ஜயசேகர எதிர் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் எனும் மிக அண்மைக்காலத்திய வழக்கில் 17.02.2021 அன்று உச்சநீதிமன்றத்தின் ஏனைய இரு நீதிபதிகளுடன் கனம் நீதிபதி அலுவிஹாரே அவர்கள் ஏற்றுஅங்கீகரித்தவை பின்வருமாறு:

> ''உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்களானவை பலவருடங்களாக சட்டவியலில் ஒரு பகுதியை கட்டமைத்து வருவதுடன் உச்ச நீதிமன்றமானது, ஜனநாயக சமுதாயத்தில் மிகவும்




| President | Deputy President | Secretary | Treasurer | Assistant Secretary |
|---|---|---|---|---|
| Saliya Pieris PC | Anura Meddegoda PC | Rajeev Amarasuriya | Rajindh Perera | Pasindu Silva |


No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk

மதிக்கப்படும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளின் நடைமுறைப்படுத்தல்களிற்கு பொது பிரச்சினைகளில் கருத்து தெரிவிப்பதற்கும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச நிறுவனங்களை விமர்சிப்பதற்குமான உரிமையானது மிகவும் அத்தியாவசியமானது என்பதயைும் அறிந்துள்ளது''

நீதிமன்றம் மேற்கோளிட்டு அனுமதித்த பின்வரும் பந்திகளானவை இலங்கை நீதிமன்றங்களின் பல தீர்ப்புக்களில் காணக்கிடைக்கின்றன.

''ஜனநாயக வழியிலான வாழ்க்கைக்கு அரசாங்கம் மற்றும் அரசியல் கட்சிகள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிகளிற்கு ஆதரவளிப்பதற்கும் விமர்சிப்பதற்குமான உரிமையானது அடிப்படையானதாகும்; … அத்துடன் அபிப்பிராயபேதங்கள் வெறுமனே பொறுத்துக்கொள்ளத்தக்கனவாய் மாத்திரமின்றி ஊக்குவிக்கபடவும் வேண்டுமென்பதை ஜனநாயகமானது தேவைப்படுத்துகின்றது''

''அரசாங்கம் மற்றும் அரசியல் கட்சிகள், கொள்கைகள் மீதான விமர்சனமானது உறுப்புரை 14 (1) (அ)வின் கீழான பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டிற்கான சுதந்திரத்தின் இயல்பான நடைமுறைப்படுத்தல்களிற்கானதாகும்."

கடுமையான விமர்சனம் அல்லது அபிப்பிராயபேதத்தினை வெளிப்படுத்தியமைக்காக கைது செய்யப்படுவதற்கும் எந்தவொரு முறைப்பாட்டினதும் முழுமையான விசாரணையிற்கு முன்னதாகவே 'போலி செய்தி' எனப்படும் குற்றத்திற்காக எந்தவொரு நபரும் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்படுவதற்கும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருப்பதானது சமுதாயத்தின் உறுப்பினர்களாக/பங்குதாரர்களாக விமர்சன பார்வைகளை வெளிப்படையாக பகிர்வதற்கான சுதந்திரம் அல்லது முக்கியமான விடயங்களின் மீது சுதந்திரமாக கருத்து தெரிவித்தலிற்கான குடிமகனது சுதந்திரம், அதிஉச்ச பாதுகாப்பு ஆகியவற்றை இல்லாதொழிக்கக்கூடியதான தீயவிளைவை தன்னகத்தே கொண்டதாகவே அமைந்துள்ளது.

மேலும், பிடியாணை இன்றி கைது செய்வதற்கான எந்தவொரு முடிவையும் நாடத் தலைப்படுவதானது ஜனநாயக *மதிப்புகள்* மற்றும் சுதந்திரத்திற்கான மரியாதையுடன் அடிப்படை சுதந்திரங்களை பேணுவதற்கான உறுதியும் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான உரிமையை நசுக்குவதனையோ அல்லது அடக்குவதனையோ தவிர்ப்பதற்கான தேவையையும் மனதில் கொள்ள வேண்டியதாக உள்ளது. சட்டம் அனுமதித்த வகையில் உண்மையான மற்றும் காரணகாரியத்துடன் குற்றஞ்சாட்டுவதற்கான தோற்றப்பாடு காணப்படுகின்றது எனும் கவனமான கருத்தாடல்கள் மற்றும் தொழில்முறையிலான மதிப்பீடுகளுடன் இது தொடர்பில் தேவைப்படுமிடத்து சட்டமா அதிபரது ஆலோசனையின் பின்னர் எந்தவொரு நபரையும் கைதுசெய்தல் அல்லது குற்றஞ்சாட்டுவது தொடர்பான முடிவானது எடுக்கப்படுமானால் அது சிறப்பானதாக அமையும் என்பது எமது பார்வையாகும்.

சட்ட அமுலாக்கமானது நியாயமானதாகவும் அதன் பிரயோகத்தில் சமமாக கையாளப்பட்டதாகவும் தெரிவிற்கு அப்பாற்பட்டதாகவும் அமையவேண்டுமென்பதனையே தொடர்ந்து கருத்தில் கொள்ள வேண்டும்.

இசசவின் இந்த கரிசனை தொடர்பாக 10/06/2021 தேதியிட்ட கடிதத்தின் மூலமாக பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.



President Saliya Pieris PC | Deputy President Anura Meddegoda PC | Secretary Rajeev Amarasuriya | Treasurer Rajindh Perera | Assistant Secretary Pasindu Silva

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk

ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்
BAR ASSOCIATION OF SRI LANKA

இசசமானது அப்படை உரிமைகளினதும் சட்டவாட்சியினதும் கொள்கைகளிலான எந்தவொரு மீறல்களையும் தொடர்ந்து கண்காணிக்கும் ஏ்னபதுடன் தேவைப்படுமிடத்து மேலதிக சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

நன்றி

**ரஜீவ் அமரசூரிய**
**செயலாளர்**
**இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்**




| President | Deputy President | Secretary | Treasurer | Assistant Secretary |
|---|---|---|---|---|
| **Saliya Pieris PC** | **Anura Meddegoda PC** | **Rajeev Amarasuriya** | **Rajindh Perera** | **Pasindu Silva** |

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk